DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 271/2018 |
| Deposition of witness | : | P.W - 1 |
| Name | : | சங்கர் |
| Father's /Husband Name | : | சீனிவாசன் |
| Village | : | அய்யம்பேட்டை |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 51 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 04th day of December 2024.
Accused present.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது அய்யம்பேட்டையில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன குமார் என் உடன் பிறந்த தம்பி ஆவார். விபத்தில் காயம்பெற்ற அன்பழகன், முத்துக்குமார் ஆகியோரை எனக்கு தெரியும். எனது தம்பி குமார் அன்பழகன் மற்றும் முத்துக்குமாருடன் சேர்ந்து பிளம்பர் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். கடந்த 13.06.2018-ம் தேதி காலை 08.00 மணிக்கு TVS Victor PY 02 8579 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் அன்பழகன் முத்துக்குமார் அவருக்கு பின்னால் எனது தம்பி குமார் அமர்ந்துக்கொண்டு பூந்தோட்டம் – திருவாரூர் சாலையில் பூந்தோட்டம் பெட்ரோல் பங்க் அருகில் எதிரி சாலையின் இடது புறமாக பொருமையாக இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது அவருக்கு பின்னால் நன்னிலம் மொபைல் போலிசுக்கான Jeep TN 50 G 0462 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை சம்பவ இடத்தில் அதிகமான இடம் இருந்தும் கவனக்குறைவாக வந்து இருசக்கர வாகனத்தில் சென்ற அன்பழகன், முத்துக்குமார், குமார் மீது மோதியதில் எனது தம்பி குமாருக்கு பலத்த அடிபட்டு முத்துக்குமார் என்பவருக்கு வயிற்றில் பலத்த அடிபட்டு, நுரையீரல் பாதிக்கப்பட்டது. அன்பழகன் என்பவருக்கு தலை மற்றும் காலில் காயம் ஏற்பட்டது. சம்பவ தினத்தன்று விபத்தை ஏற்படுத்திய காவலர் வாகனத்தை ஓட்டியது ஆஜர் எதிரிதான். அவரை நான் சம்பவத்தின் போது பார்த்தேன். எனது தம்பி குமாரை பூந்தோட்டம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்று காட்டிய போது பரிசோதித்த மருத்துவர் எனது தம்பி குமார் இறந்துவிட்டதாக கூறினார்கள். மற்ற காயம்பட்ட அன்பழகன், முத்துக்குமார் ஆகிய இருவரும் சிகிச்சைக்காக அங்கிருந்தவர் அழைத்துசென்றார்கள். இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டி பேரளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது

தான். அதில் உள்ள விபரங்கள் என்னால் கொடுக்கப்பட்டது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்பவம் பற்றி எனக்கு கண்ணன் என்பவர் தான் போன் மூலமாக தகவல் சொன்னார் என்றால் சரியல்ல. மருத்துவமனை பிணவறையில் எனது தம்பியின் பிரேதத்தை போலிசாருக்கு அடையாளம் காட்டினேனா என்றால் இல்லை. நான் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு உள்ளே செல்லவில்லை. புகார் மனுவை நான் எழுதவில்லை என்றால் சரிதான், ஆனால் நான் சொல்ல சொல்ல தான் எழுதினார்கள். புகாரில் உள்ள கையொழுத்தும் அதை பெற்ற காவலரின் கையொப்பமும் ஒன்றாக உள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. போலிசார் எழுதிய புகாரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட இருசக்கரவாகனத்தில் நான் பயணிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல, நேரடியாக பார்த்தேன். எங்கிருந்து பார்த்தேன் என்றால் சம்பவத்தின் போது நான் எனது தம்பியின் வாகனத்திற்கு பின்னால் தான் சென்றுகொண்டிருந்ததால் சம்பவத்தை நேரடியாக பார்த்தேன். நானும் அன்றைய தினம் வேலைக்காக சென்றேனா என்றால் இல்லை. நான் சம்பவத்தின்போது சென்ற இருசக்கர வாகனத்தின் விபரங்களை ஏன் புகாரில் கூறவில்லை என்றால் அதைப்பற்றி என்னிடம் கேட்கவும் இல்லை நான் பதற்றத்தில் இருந்ததால் அதைப்பற்றி கூறவும் இல்லை. விபத்துக்குண்டான இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் பயணித்தார்கள் என்றால் சரிதான். அந்த மூன்று நபர்களும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டிய அன்பழகன் என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. இரண்டு நபர்கள் செல்லும் வாகனத்தில் மூன்று நபர்கள் பயணித்தால் விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல, காவல் வாகனம் வேகமாக மோதியதில்தான் எனது தம்பி பயணித்த வாகனம் தூக்கி வீசப்பட்டு அவர்கள் வயலில் விழுந்தார்கள் அவர்கள் விழுந்தவுடன் போலிசார் எதிரியும் போலிசார் என்பதால் உடனேயே பெட்ரோல் பங்கில் இருந்த சி.சி.டி.வி பதிவுகளை அழித்தும் சேதமடைந்த மின் கம்பத்தை உடனடியாக சரிசெய்து தடயத்தை அழித்துவிட்டார்கள். விபத்தில் இருசக்கர வாகனமானது மின்கம்பத்தில் மோதியதில் மின்கம்பம் சேதமடைந்தது என்றால் இல்லை விபத்தை ஏற்படுத்திய போலிஸ் வாகனம் மோதியதில் தான் கம்பம்

சேதமடைந்தது. கம்பம் சேதமடைந்த விபரத்தை நான் புகாரில் கூறியுள்ளேனா என்றால் பதற்றத்தில் கூறவில்லை. இருசக்கர வாகனம் பெட்ரோல் பங்கில் பெட்ரோல் நிரப்பிக்கொண்டு சாலையில் ஏறும்போது விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, வாகனம் நேராக சாலையில் சென்றுகொண்டிருக்கும் போது தான் பின்னால் மோதி விபத்து ஏற்பட்டது. எனது தம்பி பயணித்த இருசக்கர வாகனம் புதுச்சேரி மாநில பதிவு எண் கொண்டது என்றால் சரிதான். புதுச்சேரி பதிவு எண் கொண்டதால் அது தமிழகத்தில் பயன்படுத்தக்கூடிய வாகனம் அல்ல என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்ட இடத்திற்கு அருகில் எனது வயல் உள்ளது என்றால் சரியல்ல. நான் வயல் இல்லை என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து எத்தனை மணிக்கு நடந்தது என்றால் எட்டு மணியளவில் நடந்தது. நான் சம்பவ நேரத்தை தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் காவலர் வாகனம் சம்பவத்தின் போது பயன்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. குமாரை யார் மருத்துவனையில் அனுமதித்தார்கள் என்றால் அனுமதித்தவர்கள் பெயர் தெரியவில்லை. உஷா என்பவர்தான் குமாரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றாலும் அதை நான் மறைக்கிறேன் என்றாலும் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. நான் சொல்வது போல் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும், நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

(ஓம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 271/2018 |
| Deposition of witness | : | P.W - 2 |
| Name | : | அன்பழகன் |
| Father's /Husband Name | : | ராசப்பன் |
| Village | : | பூந்தோட்டம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 42 |
| Occupation | : | பிளம்பர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 04th day of December 2024.
Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பூந்தோட்டத்தில் குடியிருந்து பிளம்பர் வேலை செய்து வருகிறேன். கடந்த 13.06.2018-ம் தேதி காலை 08.00 மணியளவில் TVS Victor PY 02 8579 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை நான் ஓட்ட எனக்கு பின்னால் முத்துக்குமார் மற்றும் குமார் ஆகியோர்கள் அமர்ந்துக்கொண்டு பூந்தோட்டத்திலிருந்து திருவாரூர் சாலையில் பூந்தோட்டம் பெட்ரோல் பங்க் அருகில் சாலையின் இடது ஓரமாக சென்றுகொண்டிருந்த போது எங்களுக்கு பின்னால் வேமாக வந்த போலிஸ் ஜீப் எங்கள் இருசக்கர வாகனத்தின் மீது பின்னால் வேகமாக மோதியதால் நாங்கள் அனைவரும் தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்தோம். அதில் எங்களுக்கு காயங்கள் ஏற்பட்டது. அதில் குமாருக்கு தலையில் காயம் ஏற்பட்டு பிறகு மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்துவிட்டார். நானும், முத்துக்குமாரும் எங்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு முதலில் பூந்தோட்டம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டு திருவாரூர் அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சை பெற்றோம். மேற்படி போலிஸ் வாகனத்தை சம்பவத்தின் போது ஒரு போலிசார் ஓட்டினார். போலிசார் போலிசார் என்னை சம்பவம் தொடர்பாக விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.